**பதுளை பிரதேச சபை**
**பதுளை மாவட்டம்**

-------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஏப்ரல் 04 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஆகஸ்ட் 30 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்ந்து, பதுளை பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது நிர்மாண வேலை கடன்பட்டோர் ஆகிய ரூபா 28,525 தொகை, நிதிக்கூற்றுக்களில் ரூபா 28,324,373 தொகை என பதியப்பட்டிருந்தமையால் நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 28,295,848 தொகையினால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான நிர்மாணவேலை கடன்கொடுத்தோர் ரூபா 452,070 தொகை நிர்மாணவேலைக் கடன்பட்டோர் என காட்டப்பட்டிருந்தமையால் கடன்பட்டோர் அந்த பெறுமதியினை மிகையாக மற்றும் கடன்கொடுத்தோர் குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்கான 05 நிர்மாண வேலைக் கடன்கொடுத்தோரின் கூட்டுப்பெறுமதி ரூபா 2,055,244 தொகைக்காக நிதிக்கூற்றுக்களின் ஏற்பாடுகள் ஒதுக்கியிருக்காமையால் நடைமுறை பொறுப்புக்கள் அப் பெறுமதியினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்கான நிலையான வைப்புக்கள் தொடர்பாக கிடைக்க வேண்டிய வட்டி ரூபா 328,236 தொகையினை கணக்கீடு செய்திருக்காமையினால் ஆண்டிற்கான வருமானம் அப் பெறுமதியினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் போது ரூபா 317,200 தொகை செலவிடப்பட்டு பொருத்தப்பட்டிருந்த பாதுகாப்பு புகைப்படக் கருவி முறைமையை கணக்கீடு செய்திருக்காமையால் நிலையான சொத்துக்கள் மற்றும் மூலதன செலவீட்டிற்கான அரசிறை உதவுத் தொகை கணக்கு அந்த பெறுமதியினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

**1.3.2 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 32,261,484 தொகையான பெற வேண்டிய கணக்கு மீதியில் 03 வருடங்களாக நிலுவையாக உள்ள வீதவரி ரூபா 533,452 தொகை, நிலுவை மூலதன உதவி ரூபா 31,261,608 தொகை, 10 வருடங்களாக நிலுவையாக காணப்பட்ட கடை வாடகை ரூபா 53,124 தொகை, 05 வருடங்களைக் கொண்ட நீர் கட்டணம் ரூபா 240,024 தொகை 08 வருடங்கள் நிலுவையாக உள்ள குப்பை வரி ரூபா 168,450 தொகை மற்றும் ஒரு வருடமாக நிலுவையாகவுள்ள ஏக்கர் வரி ரூபா 3,826 என்பன அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 9,633,003 தொகைக்கான செலுத்த வேண்டிய மீதியை 02 வருடங்களை கடந்துள்ள நிர்மாண வேலைக் கடன்கொடுத்தோர் ரூபா 9,142,702 மற்றும் 01 வருடத்தை மிகைத்துள்ள செலவு கடன்கொடுத்தோர் ரூபா 490,301 தொகை என்பன மீளாய்வாண்டின் போது தீர்த்திருக்கவில்லை.

**1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

சபைக்குச் சொந்தமான வங்கிக் கணக்கு ஒன்றில் காணப்பட்ட ரூபா 5,388,614 இற்கான மீதியை உறுதிப்படுத்தியிருக்கவில்லை.

**1.3.4 இணக்கமின்மைகள்**

**1.3.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மை**

சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைதுவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் தொடர்பு | | | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|---|---|
| | | | ரூபா | |
| (அ) | (i) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 149 | -- | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் 20 அறைகளை கொண்ட ஹோட்டல் ஒன்றில் இருந்து 1 சதவீதவரி, அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | (ii) | பிரிவுகள் 153(1)(அ), (ஆ),(இ) மற்றும் 2016 திசெம்பர் 09 திகதிய 1997 இலக்கங் கொண்ட வர்த்தமானி | - | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அபிவிருத்தி செய்யப்படாத காணியின் மூலதன நிலப் பெறுமதியில் 2 சதவீத வரியொன்று அறவீடு செய்வதற்கு 2017 ஆண்டின் போது துணை விதிகள் |

| | | | |
|---|---|---|---|
| | | | ஆக்கப்பட்டிருந்த போதிலும், அபிவிருத்தி செய்யப்படாத காணிகளை இனங்கண்டு வரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதிக் கோவையின் பிரிவு 218 | - | சபைக்கு சொந்தமான அனைத்து காணிகள் மற்றும் கட்டிடங்களை வருடாந்தக் கணிப்பீடு செய்திருக்கவில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1988 ஆகஸ்ட் 23 திகதிய 520/7 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியின் பொது துணைவிதியின் பிரிவு 06 | 32,100 | 2017 ஆண்டின் போது வாகனங்கள் நிறுத்தி வைத்தல் கட்டணம் அறவீடு செய்வதற்காக சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 8,988,562 தொகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,343,789 ஆகக் காணப்பட்டது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் வருமான நிலுவை

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காக சமர்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டை இடப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கிழே காணப்படுகின்றன.

| வருமான மூலம் | 2017 மதிப்பீட்டு வருமனம் | 2017 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2017 சேகரித்த வருமானம் | 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | 2016 மதிப்பீட்டு வருமனம் | 2016 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2016 சேகரித்த வருமானம் | 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) வீதவரி மற்றும் வரி | 2,231,760 | 2,231,760 | 3,182,785 | 889,536 | 2,111,760 | 2,111,760 | 2,014,048 | 1,465,227 |
| (ii) வாடகை | 546,000 | 546,000 | 747,000 | 53,123 | 528,750 | 528,750 | 389,758 | 260,602 |
| (iii) அனுமதிப் பத்திரக் கட்டணம் | 284,000 | 284,000 | 525,260 | - | 270,000 | 270,000 | 272,900 | - |
| (iv) ஏனைய வருமானம் | 7,502,500 | 7,502,500 | 9,662,818 | 15,923,400 | 6,003,000 | 6,003,000 | 12,146,617 | - |
| மொத்தம் | 10,564,260 | 10,564,260 | 14,117,863 | 16,866,059 | 8,913,510 | 8,913,510 | 14,823,322 | 1,725,829 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த சிட்டை இடப்பட்ட வருமானம் ரூபா 10.5 மில்லியன் ஆக காணப்பட்டதுடன், ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 14.1 மில்லியன் ஆகும். எவ்வாறாயினும் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 16.9 மில்லியன் வருமானம் ஒன்று அறவிடப்பட வேண்டியிருந்ததுடன், முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது நிலுவை வருமானம் 894 சதவீதத்தினால் குறைந்திருந்தது.

### 2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டண கூட்டுத்தொகை ரூபா 10,502,000 தொகையாகும்.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்களின் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்துதலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை வசதிகள் மற்றும் நலனோம்பு ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டுபிடிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) செயல் நடவடிக்கைத் திட்டம்

2017 ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை.

**(ஆ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

----------------------------------------------------------------------

சபையினால் அதிகாரப் பிரதேசத்தில் சேகரமாகும் கழிவுப் பொருட்களை வேவஸ்ஸ தோட்டத்தைச் சேர்ந்த காணி பகுதி ஒன்றில் போடப்படுவதுடன், இது தொடர்பாக பின்வரும் விடயம் அவதானிக்கப்பட்டன.

(i) 30 வருட காலம் முதல் சபையினால் வேவஸ்ஸ தோட்டத்தை சேர்ந்த காணிப் பகுதியில் குப்பை போடப்பட்ட போதிலும் இந்த காணிப் பகுதியை 2017 திசெம்பர் 31 திகதி வரை சபைக்கு உரித்தாக்கியிருக்கவில்லை.

(ii) திண்மக் கழிவுப்பொருள் தொடர்பான துணைவிதியின் பந்தி 22(ஔ) இன் பிரகாரம் 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சார் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் குப்பை போடப்படும் இடத்திற்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iii) வேவஸ்ஸ தோட்டத்தில் குப்பை போடப்படும் இடத்தில் காணப்படும் குப்பைகள் திறந்து காணப்படுவதால் மழை நீருடன் கலந்து கீழே ஓடிச் செல்லும் நீரேட்டத்துடன் சேரக் கூடியதாக உள்ளது.

(iv) உக்கக் கூடிய குப்பைகளை மீள்சுழற்சி செய்து அதன் பயன்தரக் கூடிய கருமம் ஒன்றிற்கு பயன்படுத்துவது தொடர்பாக குப்பை முகாமைத்துவம் வேலைத் திட்டமொன்று மற்றும் திட்டமொன்று சபையினால் தயாரித்திருக்கவில்லை.

(v) குப்பை சேகரிக்கும் போது உக்கக் கூடியது, உக்காதது மற்றும் இலத்திரனியல் கழிவுப் பொருட்கள் வகைப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(vi) 2017 ஆகஸ்ட் 31 திகதிய இறுதியில் குப்பை போடப்படும் இடம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

- வளவில் இரண்டு கிடங்குகள் தோண்டப்பட்டு அவற்றில் வகைப்படுத்தப்படாமல் குப்பைகளை போடப்பட்டு தீ வைக்கப்பட்டிருந்தது.
- முறையாகப் போடப்படாததினால் கொசுக்கள், நுளம்புகள் மற்றும் அவ் இடத்தை சுற்றி துர்நாற்றம் வீசியது.

(vii) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் காபனிக் உர உற்பத்தி செய்யும் செயற்திட்டமொன்றிற்காக 2016 அக்தோபர் 07 திகதிய செயற்திட்ட பிரேரணை ஒன்று சபை செயலாளரினால் ஊவா உள்ளூராட்சி ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் மதிப்பீடு ரூபா 7,550,000 தொகை என காட்டப்பட்டிருந்த போதிலும், 2017 ஆண்டின் மூன்றாம் காலாண்டு முடிவில் சுவர் கட்டுதல்/ தூண்கள் போடுதல்/ சாந்து பூசுதல் வரை ரூபா 3,150,000 கிரயத்திற்கான வேலைகள் பூர்த்தி செய்வதற்காக திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் 2017 திசெம்பர் 31 திகதி வரை செயற்திட்டத்தின் உத்தேசித்திருந்த வேலைகள் ஏதும் நிறைவேற்றி இருக்காததுடன், செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்த்த குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக சபைக்கு இயலாதிருந்தது.

**(இ) நிலை பேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்தி இலக்கு தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரல் மீது சபை அறிந்திருக்காத காரணத்தினால் அக் குறிக்கோள்களுக்கான உலகலாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் பொதுமக்களின் வாழ்க்கை தரத்தை மற்றும் சுகாதாரத்தை மேண்படுத்துவதற்காக நீண்டகால திட்டங்கள் 2018 வரையும் தயாரித்திருக்கவில்லை.

**3.2 மனித வள முகாமைத்துவம்**

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 06 வெற்றிடங்களும் மிகைகள் 16 உம் காணப்பட்டது.

**3.3 பெறுகை**

**3.3.1 பெறுகைத் திட்டம்**

மீளாய்வாண்டிற்காக பிரதேச சபையினால் வருடாந்த பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டு கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த வருமானங்கள் மற்றும் செலவுகள், உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகள் உடன் இணக்கஞ் செய்த போது 03 வருமான விடயங்களில் 52 சதவீதம் முதல் 65 சதவீதம் வரையான வீச்சில் முரண் மற்றும் 06 செலவு விடயங்களில் 22 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை விச்சில் முரண் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாடுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

2017 ஆண்டிற்கான உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் செயற்படுத்துதல்**

நிறுவனத்தின் நிதிசார் கைதேர்ந்த தன்மை மற்றும் நிதி முகாமைத்துவத்தினை அபிவிருத்தி செய்வதற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் நடாத்தப்பட வேண்டுமெனினும் 2017 ஆண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்தில் கொண்டுவரப்பட்டுள்ளதுடன் பின்வரும் கட்டுப்பாட்டு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்

| முறைமைகள் | குறைபாடுகள் |
| --- | --- |
| (அ) உள்ளகக் கட்டுப்பாடு | உத்தியோகத்தர்களிடையே வேலை பகிர்வு நடைபெற்றிருக்கவில்லை. |
| (ஆ) வருமான நிருவாகம் | (i) வருமானம் அறவீடு செய்யும் முன்னேற்றமொன்று காணப்படாமை. |
| | (ii) நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் அறவீடு செய்தல் முறைப் பிரகாரம் நடைபெற்றிருக்கவில்லை. |
| | (iii) வெளிசாராருக்கு இயந்திரங்கள் வாடகைக்கு வழங்கும் போது முறையான அங்கீகாரமொன்று மற்றும் மேற்பார்வை ஒன்று காணப்படாமை |